நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: பாரு பாரு அமெரிக்காவைப் பாரு!**

First Published : 07 Jan 2011 01:32:36 AM IST
Last Updated : 07 Jan 2011 04:17:18 AM IST

அமெரிக்காவில் ஏற்கெனவே உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்றாலும், அந்த அமைப்பை மேலும் சட்டரீதியில் வலுவுள்ளதாக மாற்றுவதற்கு ஜனவரி 4-ம் தேதி ஒரு சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார் அமெரிக்க அதிபர் ஒபாமா. இந்தச் சட்டத்துக்கு "உணவுப் பாதுகாப்பு நவீனப்படுத்தல் சட்டம்' என்று பெயர்.

இந்தச் சட்டத்தின் மிகப்பெரும் பலமாகக் கருதப்படுவது, சரியில்லாத உணவுப் பொருள் அல்லது மருந்தைத் திரும்பப் பெறுமாறு உத்தரவு போட முடியும். இதுவரையிலும் அப்படியொரு உணவுப் பொருள், மனிதருக்குக் கேடு விளைவிப்பதாக இருக்கிறது என்று தெரியவரும்போது, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று மட்டுமே வலியுறுத்த முடிந்தது. விற்பனை செய்யப்படும் கடைகளில் இந்த உணவுப் பொருள் திரும்பப்பெறப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது என்று நோட்டீஸ் ஒட்டி நுகர்வோரை வாங்கவிடாமல் செய்துவிட முடிந்தது. இப்போது உத்தரவிட முடியும் என்பதுடன், அந்த நிறுவனம் தானே சந்தைக்குச் சென்று விற்பனை செய்த அனைத்தையும் திரும்பச் சேகரித்து வர வேண்டும். இல்லையானால் அபராதம், தண்டனை இரண்டும் உண்டு.

இரண்டாவதாக, சந்தையில் உள்ள உணவுப் பொருள்கள், மருந்துகளை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்தின் மூலமாக மறுமதிப்பீடு செய்து, அதற்கேற்ப அனுமதி பெற்றாக வேண்டும். அதாவது, ஓர் அமெரிக்க நிறுவனம் எந்தவொரு உணவுப்பொருள் அல்லது மருந்துகளை இறக்குமதி செய்வதாக இருந்தாலும், அந்த இறக்குமதிப் பொருள் அமெரிக்காவின் உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உள்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டிய கடப்பாடு, பொறுப்பு இறக்குமதி செய்யும் நிறுவனத்துக்கு உண்டு.

மேலும், உணவுப்பொருள் அல்லது மருந்துகள் தயாரிக்க வாங்கப்படும் பொருள்கள் எங்கே, எப்போது வாங்கப்பட்டன, யாரால் தயாரிக்கப்பட்டன என்பது குறித்த அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்யவும் அதிகாரிகளுக்கு இனிமேல் அதிகாரம் உண்டு.

இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் 1.4 பில்லியன் டாலர் கூடுதல் செலவாகும் என்பதாலும், இந்தச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் அளவுக்கு அதிகமான நிபந்தனைகள்

சிறிய நிறுவனங்கள் மீது திணிக்கப்படுகிறது என்பதாலும், சிறு உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதாலும், எதிர்க்கட்சி தரப்பில் கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஆனால், இந்தச் சட்டத்துக்குப் பொதுமக்களிடமிருந்தும் மற்ற அமைப்புகளிடமிருந்தும் வரவேற்பு அதிகமாக இருக்கிறது.

இத்தனைக்கும் சரியில்லாத உணவு, மருந்துகளால் சாகும் அமெரிக்கர் எண்ணிக்கை என்பது மிகமிகச் சொற்பம். திரும்பப்பெறும் வேண்டுகோளை நிறுவனங்கள் மறுத்தன என்பதும் நடந்ததில்லை. இருப்பினும்கூட அங்கே இத்தகைய கெடுபிடிகளை மேலும் இறுக்குகிறார்கள்.

ஆனால், இந்தியாவில் இத்தகைய சரியில்லாத, விஷமாகக்கூடிய உணவுப்பொருள், மருந்துகள் பற்றி எந்த விழிப்புணர்வும் இல்லை. இருக்கின்ற சட்டத்தைக் கொண்டு பல்வேறு சோதனைகள் நடத்த முடியும்; அதன் உற்பத்தியைத் தடுக்கவும் முடியும் என்றாலும் நாம் அதிக கவனம் செலுத்துவதில்லை.

சில மாதங்களுக்கு முன்பு காலாவதியான மாத்திரைகள் விற்பனை தொடர்பாக மிகவும் பரபரப்பான செய்திகள், கைதுகள், நடவடிக்கைகள் என்று தமிழகமே களேபரமாக இருந்தது. ஆனால், அதன் பிறகு வழக்கம்போல எல்லாமும் மறக்கப்பட்டுவிட்டது. காலாவதி பிரச்னை காலாவதியாகிவிட்டது.

இதன் தொடர் நடவடிக்கையாக சில முக்கியமான, சங்கிலித் தொடர் மளிகைக் கடைகளில் அதிகாரிகள் சோதனை நடத்தி, தயாரிக்கப்பட்ட தேதி, எத்தனை நாளுக்குள் பயன்படுத்த வேண்டும் என்கிற விவரம் இல்லாத விற்பனைப் பொருள்களைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் இறங்கினர். பின்னர் அந்த நடவடிக்கையும்கூட கனவாய், பழங்கதையாய் மெல்லக் கழிந்தது.

கறிக்கோழியின் முழு வளர்ச்சி 65 நாள்களில் ஏற்பட்டு விடுகிறது என்பதால்தான் "சிக்கன்-65' என்று அழைக்கப்படுகிறது. ஆனால் தற்போது கோழி உணவிலும், ஊசி மூலம் செலுத்தப்படும் ஹார்மோன்கள் மூலம் வளர்ச்சியை 35 நாள்களில் துரிதப்படுத்தும் செயல்களில் பல கோழிப்பண்ணைகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இது மனிதருக்கும் மிகமிகக் கேடான, விஷமான, நோய்களை வரவழைக்கக்கூடிய மாமிச உணவு என்று எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இதன்பிறகும்கூட, சந்தையில் உள்ள கோழிகளைப் பறிமுதல் செய்து, அவை எத்தனை நாளில் முழு வளர்ச்சி பெற்றன, அத்தகைய ஹார்மோன் ஊசிகள் போடப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டும் என்கிற பொறுப்பைக் கையிலெடுக்க மத்திய, மாநில அரசுகள் தயங்குகின்றன.

சுகாதார அலுவலரால் சான்றளிக்கப்பட்ட ஆடுகள் மட்டும்தான் வெட்டப்பட்டு, இறைச்சிக் கடைக்கு வந்தாக வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் பல இடங்களில் சுகாதார அலுவலரின் முத்திரை இல்லாத ஆடுகள் நிறையவே விற்பனை செய்யப்படுகின்றன.

இன்று தமிழர்கள் எய்தும் நோயின் பெரும்பகுதி பாதுகாப்பற்ற மாமிச உணவுகளால் உண்டாகின்றன என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

இறைச்சியின் நிலைமை இதுவென்றால், காய்கறிகளிலும் கட்டுப்பாடுகள் இல்லை. எந்தெந்தக் காய்கறிகளில் எந்த அளவுக்கு நச்சு உரம் கலந்துள்ளது என்பதைக் கண்டறிந்து அதை நுகர்வோருக்கு உணர்த்தும் கடமையை மத்திய, மாநில அரசுகள் செய்வதே இல்லை. இதைச் செய்வோர் தனியார் அமைப்புகள்தான்.

சரியில்லாத உணவு, மருந்தால் சாகும் அமெரிக்கர்கள் எண்ணிக்கை மிகமிகச் சொற்பம் என்றபோதிலும் இந்தக் கெடுபிடி.

தேவையில்லாத விஷயங்களுக்கெல்லாம் அமெரிக்காவைப் பின்பற்றும் இந்திய அரசும், அரசியல்வாதிகளும் இதுபோன்ற ஆக்கபூர்வமான விஷயங்களில் அமெரிக்காவை அலட்சியம் செய்வதை "செலக்டிவ் அம்னீஷியா' (வசதியான ஞாபகமறதி) என்றுதானே குறிப்பிட வேண்டும்.

**பெல்லாரி வெங்காயம் "கிடுகிடு' உயர்வு**

First Published : 07 Jan 2011 12:00:00 AM IST



கடலூர்,ஜன.6: கடலூரில் பெல்லாரி வெங்காயத்தின் விலை வியாழக்கிழமை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

கடலூர் பான்பரி மார்க்கெட்டில் வியாழக்கிழமை பெல்லாரி வெங்காயம் சிறிய ரகம் கிலோ ரூ.30 முதல் ரூ. 35 வரை விற்பனை செய்யப்பட்டது. புதுப்பாளையம் கடைகளில் சிறிய ரகம் கிலோ ரூ. 38 க்கும், பெரிய ரகம் கிலோ ரூ. 80 முதல் ரூ. 90 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் பெரிய ரக வெங்காயத்தை பொதுமக்கள் பெரும்பாலானோர் வாங்குவது இல்லை என்றும் வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

15 தினங்களுக்குமுன் பெல்லாரி வெங்காயம் விலை உயரத் தொடங்கியது. சென்னை போன்ற பெருநகரங்களில் கிலோ ரூ. 90 முதல்

ரூ. 100 வரையில் விற்கப்பட்டபோது கடலூரில் பெல்லாரி வெங்காயம் அதிகபட்சம் ரூ. 40 வரை விற்பனை செய்யப்பட்டது. மொத்த விற்பனையாளர் ஒருவர் கிலோ ரூ. 20 க்குக்கூட விற்பனை செய்தார்.

பெல்லாரி வெங்காயத்தின் விலையைக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்தன. ஏற்றுமதிக்கும் தடை விதிக்கப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் 22 இடங்களில் பெல்லாரி வெங்காயம் விற்பனை, டிசம்பர் 23-ம் தேதிமுதல் தொடங்கப்பட்டது அப்போது கிலோ ரூ. 22க்கு விற்பனை செய்யப் பட்டது.

இதனால் பெல்லாரி வெங்காயத்தின் விலை சற்று குறையத் தொடங்கியது. ஆனால் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு நடவடிக்கைகளுக்குப் பிறகும் என்ன காரணத்தாலோ, சில தினங்களாக கடலூரில் பெல்லாரி வெங்காயத்தின் விலை மீண்டும் கிடுகிடுவென உயரத் தொடங்கிவிட்டது.

பான்பரி மார்க்கெட் காய்கறி மொத்த விற்பனையாளர் பக்கிராம் கூறுகையில், பெங்களூரில் பெல்லாரி வெங்காயம் கிலோ ரூ. 46 க்கு கொள்முதல் செய்கிறோம். இது சிறியதும் பெரியதுமாகக் கலந்து இருக்கும். இதை நாங்கள் கிலோ ரூ. 50 ஆக விற்கிறோம். அதை சில்லறை கடைக்காரர்கள் வாங்கி, தரம் பிரித்து தங்களுக்கு ஏற்றாற்போல் விலை வைத்து விற்பனை செய்கிறார்கள் என்றார்.

பண்ருட்டியில் காய்கறிகள் விலை சற்று குறைவாக இருக்கும். பெல்லாரி வெங்காயம் குறித்து பண்ருட்டி வியாபாரி ஒருவர் கூறுகையில், பெல்லாரி முதல் தரம் ரூ. 55 முதல் ரூ. 60 வரை விற்பனை செய்வதாக தெரிவித்தார். சிறிய ரகம் ரூ. 20 முதல் ரூ. 24 வரை விற்பனை செய்கிறோம் என்றும் அவர் கூறினார்.

கடலூர் மாவட்டக் கூட்டுறவுக் கடைகளில் டிசம்பர் மாதத்தில் பெல்லாரி வெங்காயம் கிலோ ரூ. 22 க்கு விற்பனை செய்யப்பட்டது. வியாழக்கிழமை சிறிய ரகம் கிலோ ரூ. 28 க்கும், மாலையில் வந்து இறங்கிய பெரிய ரகம் கிலோ ரூ. 35 க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து கூட்டுறவு அதிகாரி ஒருவர் கூறுகையில், நாங்கள் பண்ருட்டி, சிதம்பரம் மொத்த விற்பனையாளர்களிடம் இருந்தும், பெங்களூரில் இருந்தும் கொள்முதல் செய்கிறோம். பெரும்பாலும் சிறிய ரகம் தான் விற்பனை செய்கிறோம். சிதம்பரத்தில் கிலோ ரூ. 29 க்கு வாங்கி ரூ. 30 க்கும், விருத்தாசலத்தில் கிலோ ரூ. 26 க்கு வாங்கி ரூ. 27 க்கும், பண்ருட்டியில் ரூ. 28 க்கு வாங்கி ரூ. 30 க்கும் விற்பனை செய்கிறோம்.

கடலூரில் வியாழக்கிழமை கிலோ ரூ. 35 க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய ரகம் பெல்லாரி, பெங்களூரில் வாங்கப்பட்டது. கடலூர் வியாபாரிகள் சந்தர்ப்பதைப் பயன்படுத்தி, அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். பண்ருட்டி, சிதம்பரத்தில் இந்த அளவுக்கு விலை உயர்வு இல்லை.

மழை காரணமாக பெல்லாரி வெங்காயம் தட்டுப்பாடு இருக்கத்தான் செய்கிறது. கொள்முதல் செய்யும் இடங்களில் ஓரளவுக்கு விலை உயர்ந்து இருக்கிறது. ஆனால் வியாபாரிகள்தான் விலையைத் தாறுமாறாக உயர்த்துகிறார்கள் என்றார்.

**நவரை நெல் சாகுபடி தொடங்கியது**

First Published : 07 Jan 2011 12:00:00 AM IST



கடலூர்,ஜன. 6: கடலூர் மாவட்டம் பெருமாள் ஏரி ஆயக்கட்டு பகுதிகளில், நவரைப் பட்ட நெல் சாகுபடி தொடங்கியுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள பிரதான ஏரிகளில் ஒன்று பெருமாள் ஏரி. வீராணம் ஏரியின் உபரி நீரால் நிரம்பும் இந்த ஏரியின் ஆயக்கட்டு சுமார் 10 ஆயிரம் ஏக்கர். அதிகபட்ச கொள்ளளவு உயரம் 6.5 அடி. கர்நாடகத்துடன் காவிரி நீர் தாவா தொடங்கியது முதல், வீராணம் ஏரிக்கு நீர்வரத்து பாதிக்கப்பட்டதுடன், பெருமாள் ஏரி பாசனப் பகுதிகளும் பாதிக்கப்பட்டன.

வடகிழக்குப் பருவ மழை காலத்தில் ஆண்டுதோறும் இந்த ஏரி நிரம்பி வழிந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆண்டு 15 தினங்களுக்குமேல் விநாடிக்கு 6 ஆயிரம் கன அடிக்கு மேல், ஏரியில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டது.

ஆனால் இதன் ஆயக்கட்டு பகுதிகளான 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களில், சம்பா நெல் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் ஆண்டு தோறும் அவதிக்கு உள்ளாகிறார்கள். வடிகால்கள் தூர்ந்து கிடப்பதால், வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பரவனாற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு, முறையாக கடலில் வடியாமல் 15 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களில் தேங்குவதால், இந்த பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகிறார்கள். சம்பா பருவத்துக்கு அடுத்தபடியாக நவரை பட்டத்தில்தான் இங்கு நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் ஏரி தூர்ந்து கிடப்பதால்

நவரைப் பட்டத்துக்கும், முழுமையாக தண்ணீர் கிடைப்பது இல்லை. இதை ஈடு செய்கிறது என்.எல்.சி. சுரங்கங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீர்.


மழை நீர் மற்றும் என்.எல்.சி. சுரங்க நீர் ஆகியவற்றைக் கொண்டு பாசன வசதி பெறும் பெருமாள் ஏரி ஆயக்கட்டு பகுதிகளில் நவரைப் பட்ட நெல் சாகுபடி தொடங்கப்பட்டு உள்ளது.

பெருமாள் ஏரி பாசனப் பகுதிகளான ஆலப்பாக்கம், பூண்டியாங்குப்பம், கல்லையங்குப்பம், சிறுபாலையூர், குண்டியமல்லூர், தீர்த்தநகரி, அணுகம்பட்டு உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட கிராமங்களில், தற்போது நாற்றங்கால் பணிகளும், நேரடி நெல் விதைப்புப் பணிகளும் தீவிரமாக நடந்து வருகின்றன. தற்போது பெய்து வரும், காலம் கடந்த வடகிழக்குப் பருவ மழை, பெருமாள் ஏரி பாசனப் பகுதிகளில் நவரைப் பட்ட சாகுபடிக்கு உகந்ததாக இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

மேலும் இந்த ஆண்டு வாலாஜா ஏரியில் தூர் வாரும் பணி நடைபெற இருக்கிறது. எனவே வாலாஜா ஏரிக்குக் கிடைக்கும் என்.எல்.சி. சுரங்க நீர், பெருமாள் ஏரிக்கு திருப்பி விடப்படும் என்பதால், நவரைப் பட்ட நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றைக் குறை ஏற்படாது என்று விவசாயிகளிடையே நம்பிக்கை ஏற்பட்டு இருப்பதாக பெருமாள் ஏரி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் சண்முகம் தெரிவித்தார்.

**பூண்டி ஏரி மீண்டும் திறப்பு**

First Published : 07 Jan 2011 12:00:00 AM IST



திருவள்ளூர், ஜன. 6: செங்குன்றம் ஏரி நிரம்பியதை அடுத்து பூண்டி ஏரியில் மீண்டும் மதகு திறக்கப்பட்டு ஆரணி ஆற்றில் நீர் வெளியேற்றப்படுகிறது.

÷சென்னை குடிநீரின் முக்கிய ஆதாரமாக உள்ளது பூண்டி ஏரி. இந்த ஏரியில் சேமிக்கப்படும் நீர் இணைப்புக் கால்வாய் வழியாக செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கு நீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

÷இந்நிலையில் கடந்த மாதம் பெய்த வடகிழக்குப் பருவ மழை காரணமாக பூண்டி ஏரி நிரம்பி டிசம்பர் மாதம் 4-ம் தேதி ஏரியின் உபரி நீரை 4 மதகுகள் திறக்கப்பட்டு அதன் வழியாக ஆரணி ஆற்றுக்கு நீர் வெளியேற்றப்பட்டது.

÷தொடர்ந்து இணைப்புக் கால்வாய் வழியாக விநாடிக்கு 400 கனஅடி வரை நீர் செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஆகிய ஏரிகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது. பின்னர் ஏரியின் நீர் மட்டம் குறைந்ததை அடுத்து பூண்டியின் மதகுகள் மூடப்பட்டு இணைப்புக் கால்வாய் வழியாக நீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

÷இந்நிலையில் செங்குன்றம் ஏரி நிரம்பியை அடுத்து பூண்டி ஏரியில் இருந்து இணைப்புக் கால்வாய் வழியாக வெளியேற்றப்படும் நீர் நிறுத்தப்பட்டது. ஏற்கெனவே கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா கால்வாய் வழியாக விநாடிக்கு 390 கனஅடி நீர் வரத்து உள்ளதால் படிப்படியாக பூண்டி ஏரியின் நீர் மட்டம் உயர்ந்து ஏரியின் மொத்த உயரமான 35 அடி நீர்மட்டத்தை தாண்டியது.

÷இதையடுத்து புதன்கிழமை மாலை முதல் பூண்டி ஏரியில் 7-ம் எண் மதகு திறக்கப்பட்டு விநாடிக்கு 200 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. மேலும் இணைப்புக் கால்வாய் வழியாக விநாடிக்கு 110 கனஅடி நீர் திறக்கப்பட்டு செம்பரம்பாக்கம் ஏரிக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**பெரியாறு அணையில் நவீன கேமராக்களுடன் வீரர்கள் ஆய்வு**

First Published : 07 Jan 2011 01:19:01 AM IST

Last Updated : 07 Jan 2011 05:04:36 AM IST



பெரியாறு அணைப் பகுதியில் தண்ணீருக்குள் மூழ்கி எடுத்த படங்களைப் பார்வையிடும் நீர்மூழ்கி வீரர்.

கம்பம், ஜன. 6: பெரியாறு அணையில் நவீன கேமராக்களுடன் நீர்மூழ்கி வீரர்கள் வியாழக்கிழமை ஆய்வைத் துவக்கினர்.

அணையின் உறுதித்தன்மை குறித்த தொழில்நுட்பக் குழு ஆய்வுக்கு தொடர்ந்து தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் ஆர்.சுப்பரமணி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பெரியாறு அணையின் பலம் மற்றும் உறுதித் தன்மை குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, உச்ச நீதிமன்றம் சார்பில் ஓய்வுபெற்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. இக் குழுவினர், 2010 டிசம்பர் 21-ல் முல்லைப் பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதைத் தொடர்ந்து உயர்நிலைக் குழுவினரின் ஆலோசனைப்படி, அணையில் தண்ணீரின் கீழ் 109 அடி முதல் தரைப்பகுதி வரை விரிவான தொழில்நுட்ப ஆய்வு நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, தில்லியைச் சேர்ந்த மத்திய மண் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (சி.எஸ்.எம்.ஆர்.எஸ்.) இணை இயக்குநர் ராஜ்பால்சிங் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள், மின்சார ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பொறியாளர்கள் ஆகியோர் கொண்ட குழுவின் ஆலோசனைப்படி இரண்டாவது நாள் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வியாழக்கிழமை காலை 1,200 அடி நீளமுள்ள பிரதான அணையில் 136 அடி உயரத்தில், ஒவ்வொரு 100 அடியிலும் குறியீடு செய்யப்பட்டு, புவனேஸ்வரத்தைச் சேர்ந்த ரத்தன்கர் தலாய் தலைமையில் பசுதேவ் பண்டரா, பிரகாஷ்பியூரா, சந்தோஷ்குமார், முஸ்தாகீர் உள்ளிட்ட நீர்மூழ்கி வீரர்கள் நவீன சிலிக்கன் கேமராக்களுடன் தண்ணீருக்குள் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் தரைமட்டப் பகுதி, களிமண் அடர்த்தி, பாறை உள்ளிட்ட பகுதிகளையும், அணையின் கீழ்மட்ட பகுதி குறித்தும் படம் எடுத்தனர். அணையின் அருகே பல இடங்களில் தண்ணீரின் ஆழம் அளவிடப்பட்டது. இந்தப் பணிகள் காலை 10 மணி முதல் பகல் 3 மணி வரை நடைபெற்றன.

பெரியாறு அணையின் முக்கியப் பகுதிகளில், மாதிரி வெட்டி எடுக்க குறியீடு செய்யும் பணியில், சி.எஸ்.எம்.ஆர்.எஸ் குழுவினர் ஈடுபட்டனர்.

அப்போது, கேரளத்தின் முன்னாள் தலைமைப் பொறியாளர் எம். சசிதரன், அணையில் நாங்கள் குறிப்பிடும் இடங்களில் மட்டும் மாதிரியை எடுக்க வேண்டும் என்றும், மாதிரிகளை கேரளத்தில் உள்ள பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் சோதனை நடத்தும் வசதி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கு, மத்தியக் குழுவினர் மறுப்புத் தெரிவித்ததுடன், நாங்களே சோதனை நடத்தி கொள்வோம் எனத் தெரிவித்தனர். மேலும், அணைப் பகுதியில் 300, 600, 900 அடியில் மாதிரி எடுக்க குறியீடு செய்தனர். இதற்கு கேரள குழுவினர் ஆட்சேபம் தெரிவித்ததற்கு. மத்திய நிபுணர் குழு இதில் நீங்கள் தலையிடக் கூடாது என்று கண்டித்தனர்.

இறுதியாக, அணைப் பகுதியில் பென்னிகுக் காலத்தில் அணை கட்டப் பயன்படுத்திய சுருக்கி, சுண்ணாம்புக் கலவை தயாரித்த பகுதியில் சுருக்கி கலவை குறித்து ஆய்வு நடத்தினர். 3-வது நாளாக வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து ஆய்வு பணி நடைபெற இருக்கிறது.

**வேளாண்காடுகள் குறித்து பயிற்சி முகாம்**

First Published : 06 Jan 2011 12:52:33 PM IST

மேட்டுப்பாளையம், ஜன. 5: மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி வளாகத்தில் வரும் ஜன. 24, 25ம் தேதிகளில் ஆலைகளுக்குத் தேவையான மரங்கள் மற்றும் மதிப்புக்கூட்டு தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து கல்லூரி வனவியல் பேராசிரியர் துரைராசு வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்துடன் இணைந்து கல்லூரி வளாகத்தில், ஆலைகளுக்குத் தேவையான மரங்கள் மற்றும் மதிப்புக் கூட்டுத் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடத்தகிறது.

இதில், மரக்கூழ் காகித மரங்கள் மற்றும் தீக்குச்சி மரங்கள் பற்றிய பயிற்சிகள் கல்லூரி விஞ்ஞானிகளால் வழங்கப்பட உள்ளன.

மேலும் மரங்கள் பற்றிய வளர்ப்பு முறைகள், உரங்கள் மற்றும் நீர்நிர்வாகம், மண்ணின் தன்மை, பூச்சிநோய் கட்டுப்படுத்துதல், மரம் சார்ந்த ஒப்பந்தச் சாகுபடி முறை, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் ஆகியவை குறித்தும் கற்றுத் தரப்படும்.

இதில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், கல்லூரி முதல்வரையோ, அல்லது திட்ட அலுவலர் பார்த்திபனையோ 04254 - 222010 அல்லது 94435 05844 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம்.

**விவசாயிகள் நல வாரியத் தலைவர் நாளை தருமபுரி வருகை**

First Published : 06 Jan 2011 08:53:31 AM IST

தருமபுரி, ஜன. 8: தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நல வாரியத் தலைவர் கு. செல்லமுத்து, இணைத் தலைவர் வி.பி. ராஜன் ஆகியோர் தருமபுரிக்கு வெள்ளிக்கிழமை (ஜனவரி 7) வருகை தருகின்றனர்.

விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் நலத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை அலுவலர்களுடன் ஆய்வு

நடத்துகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படும் என ஆட்சியர் இரா. ஆனந்தகுமார் தகவல் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,01:08 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டதில் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் புள்ளியல் துறை மூலம் பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வு நடந்தது. காப்பீடு திட்டத்தில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள பயிரின் விளைச்சல் விபரங்களை கணித்து, வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலங்களில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குதல், சாகுபடியாளர்களின் நம்பிக்கையை வளர்த்து விவசாய தொழிலை மேம்படுத்துதல், உணவு மற்றும் உணவு இல்லாத பயிர்களின் உற்பத்தி மற்றும் சாகுபடியை முறைபடுத்துதல் போன்றவை தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் புள்ளி இயல் துறை மூலம் பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வு நடந்தது. திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து, விளைச்சல் விபரங்கள் துல்லியமாக அறிய பரிசோதனைகள் வேளாண் துறையால் நடத்தப்படும் போது புள்ளி இயல் துறை அலுவலர்களால் அறுவடை நிலை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஓசூர் தாலுகா பாத்தமுத்தாலி கிராமத்தில் நெல் சம்பா பயிர் அறுவடை ஆய்வு நடந்தது. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, இணை இயக்குனர் பாலசுப்பிரமணியன் ஆய்வு செய்தார். மாவட்ட புள்ளி இயல் உதவி இயக்குனர் மனோகரன், ஓசூர் கோட்ட புள்ளி இயல் அலுவலர் சாந்தி, ஓசூர் வட்டார புள்ளியில் ஆய்வாளர் சுந்தரமூர்த்தி, வேளாண் துணை அலுவலர் செல்வம் மற்றும் விவசாயிகள் உடன் இருந்தனர்.

**கிராம கல்விக்குழு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,00:02 IST

நரிக்குடி : நரிக்குடி வட்டார வள மையத்தில் கருத்தாளர்கள் மற்றும் அறிவியல் இயக்க உறுப்பினர்களுக்கு கிராம கல்விக்குழு பயிற்சி, மைய மேற்பார்வையாளர் அர்ச்சுனன் தலைமையில் நடந்தது. உதவி தொடக்க கல்வி அலுவலர் சீனிவாசன், கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர் ராமசாமி முன்னிலை வகித்தனர். ஆசிரியர் பயிற்றுனர்கள் முத்துலட்சுமி, கணேஷ்வரி, அறிவியல் இயக்க உறுப்பினர் கண்ணன் பயிற்சி அளித்தனர். மாவட்ட அறிவியல் இயக்க தலைவர் குழந்தைவேல் பாண்டியன் கலந்து கொண்டார்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர் சேத நிவாரண பணி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,01:18 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர் சேத நிவாரணம் வழங்கும் பணியினை கலெக்டர் மகேஷ்வரன் ஆய்வு செய்தார்.தூத்துக்குடி மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையால் சேதமடைந்த பயிர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான இழப்பீடு தொகை அரசால் அனுமதிக்கப்பட்டு மாவட்டத்திற்கு முதல் கட்டமாக 12 கோடி ரூபாய் வந்துள்ளது. இந்த தொகை 45 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் உரிய ஆவணங்களை பெற்று பாங்க் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து அல்லது ஏற்கனவே உள்ள பாங்க் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கும் பணியினை கலெக்டர் மகேஷ்வரன் ஆய்வு செய்தார். ஓட்டப்பிடாரம் தாலு கா சில்லாநத்தம் தொடக்க வேளா ண்மை கடன் சங்கத்தில் இழப்பீடு தொகை வழங்கும் முறைகளை ஆய்வு செய்த கலெக்டர், விவசாயி மாரியப்பனுக்கு இழப்பீடு தொகையினை வழங்கினார். பின்னர் சாமிநத்தம் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் இழப்பீடு தொகை வழங்கிடும் முறைகளை ஆய்வு செய்தார். இழப்பீடு தொகை வாங்க வந்த விவசாயிகளிடமும் சங்க காரியதரிசியிடமும் நிவாரண தொகை வழங்கப்படும் விதம் குறித்து கலந்துரையாடினார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காலதாமதம் எதுவும் இல்லாமல் நிவாரணத் தொகை வழ ங்க உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு உரிய ஆவணத்துடன் சென்ற பயிர் இழப்பீடு தொகை பெற்றிட வேண்டும் என்றும் கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**5 நாளில் மஞ்சள் விலை ரூ. 1,000 விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,02:15 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் சென்ற ஐந்து நாட்களில் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு தமிழகம் மற்றும் கர்நாடகா பகுதியில் இருந்து மஞ்சள் வரத்தாகிறது. சென்றாண்டில் டிசம்பர் மாதம் இறுதியில் மஞ்சள் ஒரு குவிண்டால் 17 ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்பனையானது. சில நாட்களாக பல்வேறு பகுதியில் இருந்து புது மஞ்சள் வரத்தாகிறது. புது மஞ்சள் வரத்து காரணமாக மஞ்சள் விலை திடீரென வீழ்ச்சியடையத் துவங்கியுள்ளது. டிசம்பர் 31ம் தேதி வரை ஒரு குவிண்டால் மஞ்சள் 17 ஆயிரத்து 200 ரூபாய் வரை விற்பனையானது. ஜனவரி 3ம் தேதி 500 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்து 16 ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று, 500 ரூபாய் வீழ்ச்சியடைந்தது. ஈரோடு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் 16 ஆயிரத்து 81 ரூபாய், கிழக்கு மஞ்சள் 16 ஆயிரத்து 56 ரூபாய்க்கும் விற்பனையானது. சென்ற ஐந்து நாட்களில் மட்டும் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

**கிராமங்களை தேடி வரும் கால்நடை ஆய்வுக்கூடம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,02:10 IST

ஈரோடு: ""விடுமுறை நாட்களை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் கிராமங்களுக்கு, நடமாடும் கால்நடை ஆய்வுக் கூடம் செல்லும்,'' என, கலெக்டர் சவுண்டையா கூறினார். கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை நோய் புலனாய்வு பிரிவு சார்பில், தமிழகம் முழுவதும் 20 நவீன நடமாடும் கால்நடை மருத்துவ ஆய்வுக்கூட வாகனம் வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தை துவக்கி வைத்து கலெக்டர் சவுண்டையா கூறியதாவது: அனைத்து கிராமப்பகுதிக்கும் ஆய்வு கூட வாகனம் செல்லும். மைக்ரோ லேப், குளிர்சாதனப் பெட்டி, பிரேத பரிசோதனை ஆய்வுக்கூடம், ரத்த மாதிரி ஆய்வு கூடம் ஆகியவை இதில் உள்ளன. விடுமுறை நாட்களை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் நடமாடும் ஆய்வு கூட வாகனம் கிராமங்களுக்கு செல்லும். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் மற்றும் உடல் ரீதியான பிரச்னைகள் இங்கு பரிசோதனை செய்யப்படும்.

வாகனத்தில் கால்நடை டாக்டர், பணியாளர்கள், ஆய்வுக்கூட உதவியாளர்கள் இருப்பர். இலவசமாக, கால்நடைகளின் ரத்தம், சிறுநீர், சாணம், பால், தோல் மற்றும் சீழ் ஆகியவற்றை சேகரித்து, பரிசோதனை செய்து, நோய்க்காரணிகள் அறிந்து தெரிவிப்பர். சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்கள், நோய் தாக்கிய பகுதிகள், இறைச்சிக்கூடம் ஆகிய இடங்களில் பரிசோதனை

மேற்கொள்ளப்படும். கால்நடைகளில் ஏற்படும் தாது உப்பு குறைபாடுகள் கண்டறியவும், கால்நடை மருந்தகங்களில் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளில் இருந்து மாதிரிப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு உடன் பரிசோதனை செய்ய நடமாடும் ஆய்வுக்கூட வாகனம் பயன்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**தோட்டக்கலை துறை விளக்க கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,01:17 IST

துவரங்குறிச்சி: துவரங்குறிச்சி அருகே கல்லுப்பட்டியிலுள்ள மருங்காபுரி யூனியன் அலுவலகத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில், திட்ட விளக்க கருத்தரங்கம் நடந்தது. மருங்காபுரி யூனியன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, ஜீவானந்தம் ஆகியோர் தலைமை வகித்தனர். இதில், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் கணேசன், துணை அலுவலர் கோவிந்தராஜ், உதவி அலுவலர்கள் பொன்னையா, அன்பு செழியன், ராஜு ஆகியோர் பங்கேற்று தோட்டக்கலை துறை சார்பில், செயல்பட்டு வரும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டங்கள், துல்லிய பண்ணை திட்டம், நுண்ணீர் பாச திட்டம் மற்றும் மத்திய, மாநில அரசுகள் மூலம் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், தோட்டக்கலை துறை சார்பில் வழங்கப்படும் விதைகள் மற்றும் பழக்கன்றுகள் குறித்தும், இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் குறித்தும் விளக்கி கூறினர். இதில், மருங்காபுரி யூனியனை சேர்ந்த அனைத்து பஞ்சாயத்து தலைவர்களும் பங்கேற்றனர்.

**கோபியில் விதை உற்பத்தி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,02:15 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டார வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கான விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் "முட்டை மிதப்பு' முறை மூலம் நல்ல விதைகள் தேர்வு, உயிர் உரங்கள், நுண்ணூட்ட அவசியம், பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பயிர்களை காப்பாற்றுவது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. உதவி இயக்குநர் ஆசைதம்பி, கோபி விதை சான்று அலுவலர் மாரியப்பன் பயிற்சியளித்தனர். நாகதேவன்பாளையம், முள்ளங்கரை, பொலகாளிப்பாளையம் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நோய் தாக்கி தக்காளி செடிகள் பாதிப்புபனிப்பொழிவால் வாடும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,01:51 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் பனி பொழிவால் தக்காளி செடிகள் நோய் தாக்கி முற்றிலும் பட்டு போய் விட்டதால் இரு மாதத்தில் மூன்று முறை தக்காளி விலை உயர்ந்து தற்போது, கிலோ 40 ரூபாய்க்கு விற்பனையாகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,000 ஹெக்டேரில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ராயக்கோட்டை, ஓசூர், பேரிகை, பாகலூர், தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் மற்றும் சூளகிரி பகுதியில் விவசாயிகள் ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர்.இங்கு உற்பத்தியாகும் தக்காளி கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதியாகிறது. கடந்த இரு மாதத்திற்கு முன் பெய்த பரவலான மழையால் தக்காளி செடிகள் அழிந்து தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டது.இதனால், கிலோ 8 ரூபாய்க்கு விற்ற தக்காளி திடீரென 15 ரூபாய்க்கு உயர்ந்தது. இதே போல், தென்மாவட்டத்திலும் கனமழையால் தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டதால் அங்கு தக்காளி விலை "கிடுகிடு'வென உயர்ந்தது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியான ஒட்டமொத்த தக்காளியும் வியாபாரிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி தென் மாவட்டங்களுக்கு ஏற்றுமதியானது. மாவட்டத்தில் தக்காளிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் கிலோ 25 ரூபாய்க்கு விலை உயர்ந்தது.கடந்த ஒருமாதமாக ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கடந்த 15 ஆண்டுக்கு முன் காணப்பட்ட கடும் குளிரும், பனி பொழிவும் தற்போது ஏற்பட்டுள்ளது. தக்காளி செடிகள் அனைத்தும் பனி பொழிவாலும், குளிர்ந்த காற்றாலும் முற்றிலும் பட்டு விட்டது. தக்காளி பிடித்தாலும் செடிகளில் அவை வாடி அதிக கரும்புள்ளிகளும், சிறுத்து போய் காணப்படுகிறது.ஓசூர் பகுதியில் தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டு கடந்த நான்கு நாட்களாக எப்போதும் இல்லாத வகையில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உழவர்சந்தை முதல் வெளிசந்தை மார்க்கெட்டுகளிலும் தக்காளி விலை உச்சத்தை எட்டியுள்ளது.உழவர்சந்தையில் கிலோ 35 ரூபாய்க்கும், வெளி சந்தைகளில் கிலோ 40 ரூபாய்க்கும், சில்லறை விற்பனை கடைகளில் கிலோ 50 ரூபாய் வரையும் விற்பனையாகிறது. இதனால், நடுத்தர, ஏழை மக்கள் தக்காளி வாங்கி சமையல் செய்ய முடியாமல் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். குறிப்பாக தக்காளி அன்றாட சமையிலில் முக்கிய பங்கு வகிப்பதால் உள்ளூர் வியாபாரிகளுக்கு விலையை கண்டு கண்டு விலை ஏற்றி வைத்து விற்கின்றனர்.இதுகுறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறியதாவது:தற்போது உள்ள இந்த விலைஉயர்வு இன்னும் ஒரு வாரம் நீடிக்க வாய்ப்புள்ளது. பொங்கலுக்கு பின் தற்போது சாகுபடி செய்துள்ள தக்காளி செடிகளில் தக்காளி உற்பத்தியாக வாய்ப்புள்ளது. இதனால், மீண்டும் விலை குறைய வாய்ப்புள்ளது. ஆண்டு ஒருமுறை இதுபோன்ற விலை உயர்வு ஏற்படுவது வாடிக்கை. நடப்பாண்டு மழை மற்றும் பனி பொழிவு மற்றும்

வெளிமாவட்ட தேவை அதிகரிப்பு ஆகியவை தொடர்ச்சியாக ஏற்பட்டதால் தக்காளி விலை உயர்வு இருமாதமாக நீடிக்கிறது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**வாகா எல்லை வழியாக வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்தது பாக்.,: இந்தியா அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,23:58 IST



இஸ்லாமாபாத் : இந்தியாவுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய, பாகிஸ்தான் அரசு திடீரென தடை விதித்துள்ளது. பாகிஸ்தானின் இந்த முடிவால் இந்தியா அதிர்ச்சியடைந்துள்ளது. இதனால், வெங்காயத்தின் விலை மீண்டும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், நாடு முழுவதும் வெங்காயத்தின் விலை வரலாறு காணாத வகையில் உயர்வை சந்தித்தது. சந்தையில் ஒரு கிலோ, 20 முதல் 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காயத்தின் விலை, திடீரென கிலோ 100 ரூபாய் வரை விற்கப்பட்டது. வெங்காயத்தின் திடீர் விலை உயர்வால், மக்கள் கடும் அவதியடைந்தனர். மேலும், மத்திய அரசு மீது கடும் அதிருப்தியும் ஏற்பட்டது. விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. வெளிநாடுகளிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய, மத்திய அரசு முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து, பாகிஸ்தானிலிருந்து வாகா எல்லை வழியாக வெங்காயத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்து, வாகா எல்லை வழியாக லாரிகள் மூலம் தினமும் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. வெங்காய இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதிலிருந்து இதுவரை 7,000 டன் வெங்காயம் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதனால், பஞ்சாப் உள்ளிட்ட சில வடமாநிலங்களில் வெங்காயத்தின் விலை கணிசமாகக் குறைந்தது.

இந்நிலையில், தரை வழியாக இந்தியாவுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு, பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. பாகிஸ்தானில் வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயரும் என்று கருதி, அந்நாட்டு அரசு இந்த தடையை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. பாகிஸ்தான் அரசின் அறிவிப்பை தொடர்ந்து, வாகா எல்லை வழியாக நேற்று முன்தினம் இந்தியாவுக்கு வெங்காயம் ஏற்றி வந்த 150 லாரிகளை, பாகிஸ்தான் சுங்கத்துறை அதிகாரிகள் திருப்பி அனுப்பி விட்டனர். இதனால், இரு நாட்டு வியாபாரிகள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து அமிர்தசரஸ் நகரை சேர்ந்த வெங்காய வியாபாரி மேரா கூறியதாவது: பாகிஸ்தான் அரசின் தடை உத்தரவுக்கு முன்னதாகவே, 1,500 டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய, அந்நாட்டு சுங்கத்துறையிடம் அனுமதி பெறப்பட்டது. ஆனால், தடையை காரணம் காட்டி, ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட வெங்காயத்தையும் ஏற்றுமதி செய்வதற்கு பாகிஸ்தான் சுங்கத் துறையினர் மறுத்துவிட்டனர். இதனால், இரு நாட்டு வியாபாரிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர், என்றார். பாகிஸ்தான் முடிவு, "அதிர்ச்சி தருகிறது' என்று மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த சர்மா தெரிவித்தார். ஆனால், கடல் வழியாக மும்பைக்கு வெங்காயத்தை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்ய, அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இதன் மூலம் 1,300 டன் இறக்குமதி செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

**நெறிகட்டி ஏறுகிறது உணவு பொருட்கள் விலை: மத்திய அரசு தலையிடுமா?**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,23:38 IST



புதுடில்லி : காய்கறிகள், வெங்காயம் ஆகியவற்றின் கடுமையான விலை உயர்வு காரணமாக, உணவு பொருட்களுக்கான பணவீக்கம் 4 சதவீதம் அதிகரித்து, 18.32 சதவீதத்தை எட்டியுள்ளது. இதனால், மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் இதில் தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உணவு பொருட்களின் விலை, இப்படியே உயர்ந்து கொண்டிருந்தால், மத்திய ரிசர்வ் வங்கி, வட்டி விகிதங்களை மாற்றியமைக்கும் வகையில், நிதி கொள்கையை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும் என, பொருளாதார வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பரில் வெங்காயம் மற்றும் காய்கறிகளின் விலை, ஏழை மற்றும் நடுத்தர மக்களை பாதிக்கும் வகையில் இருந்தது. இதனால், நவம்பர் வரை கட்டுக்குள் இருந்த உணவு பொருள் பணவீக்கம் தொடர்ந்து மேலே ஏற துவங்கியது. கடந்த டிசம்பர் 18ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் 14.44 சதவீதமாக இருந்தது. இதன்பின் ஒரு வார காலத்தில் தான் அனைத்து விலைகளும் கூடின. வெங்காயத்தில் துவங்கி, பூண்டு, புளி என சகட்டுமேனிக்கு விலைகள் ஏறின. குறிப்பாக வெங்காயத்தின் விலை 82 சதவீதமும், காய்கறிகள் விலை 59 சதவீதமும் உயர்ந்து, பால் உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்தன. இதனால், டிசம்பர் 25ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் பணவீக்கம் 18.32 சதவீதமாக உயர்ந்தது. தொடர்ந்து ஐந்து வாரமாக உணவு பொருட்கள் பணவீக்கம் இரட்டை இலக்கத்திலேயே உயர்ந்து கொண்டிருக்கிறது.

உணவு பொருள் பணவீக்கம் உயர்வது, வேகமான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகரும் இந்தியாவுக்கு தடையாக இருக்கும் என, சர்வதேச நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்தாண்டில் மட்டும், பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய ரிசர்வ் வங்கி, ஆறு முறை வட்டி விகிதங்களை மாற்றியமைத்தது. தற்போதுள்ள நிலையில் 18 சதவீதத்திற்கு மேல் சென்றுள்ள உணவு பொருட்கள் பணவீக்கம், ஒட்டுமொத்த பணவீக்கத்தை ஆட்டம் காண செய்யலாம். எனவே, வரும் 25ம் தேதி, மத்திய ரிசர்வ் வங்கி அறிவிக்கவுள்ள நிதி கொள்கையில் பல அதிரடி மாற்றங்கள் அறிவிக்கப்படும் என தெரிகிறது. மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், "இது வாராவாரம் உள்ள பொருட்களின் விலை நிலவரத்திற்கு ஏற்பவுள்ள புள்ளி விவரம். வாரம்தோறும் சில மாறுபாடுகள் இருக்க தான் செய்யும். மாதந்தோறும் வெளியாகும் பணவீக்கம் புள்ளி விவரத்தை தான் எதிர்பார்த்துள்ளோம்' என்றார்.

நிதி அமைச்சகத்திற்கான முதன் மை பொருளாதார ஆலோசகர் கவுசிக் பாசு கூறுகையில், "உணவு பொருட்களுக்கான பணவீக்கம் இந்த அளவில் உயரும் என்று எதிர்பார்த்தது தான். இருப்பினும் இதற்கு மேல் செல்ல வாய்ப்பு இல்லை. வெங்காயத்தின் விலை உயர்வு தான், உணவு பொருட்கள் பணவீக்கம் அதிகரிப்பதற்கு காரணம். இதன் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருகிறது. வெங்காயம் அனைத்து மாநிலங்களுக்கும் தட்டுப்பாடு இன்றி சென்று சேருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றார்.

**விவசாயிகள் பயன்பெற அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,23:37 IST

கோத்தகிரி : கோத்தகிரி பகுதி விவசாயிகள் அடையாள அட்டை உள்ளிட்ட சலுகைகள் பெற, தோட்ட கலைத்துறை அழைப்பு விடுத்துள்ளது. கோத்தகிரி தோட்ட கலைத்துறை உதவி இயக்குனர் மணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோத்தகிரி வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராம பகுதிகளிலும் ஊர் தலைவர், ஊராட்சி தலைவர், உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் முன்னிலையில் தோட்ட கலைத்துறை மூலம் விவசாயம் தொடர்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.இதன்படி, 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள் வழங்குதல், 25 சதவீத மானியத்தில் கைத்தெளிப்பான், ஆயில் எஞ்சின், தேயிலை இலைப் பறிக்கும் கருவி, வேளாண் கருவிகள் மற்றும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இத்திட்டம், கடந்த மாதம் 19ம் தேதிமுதல் தொடர்ந்து அந்தந்த கிராமங்களில் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, அனைத்து பகுதி விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறவேண்டும். இவ்வாறு மணி கூறியுள்ளார்.

**திண்டுக்கல்லில் "மாதிரி உழவர்சந்தை' ரூ. 40 லட்சம் செலவில் அமைகிறது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,23:36 IST

திண்டுக்கல் : திண்டுக்கல் நாகல்நகரில் 40 லட்ச ரூபாய் செலவில் "மாதிரி உழவர்சந்தை' அமைகிறது. நாகல்நகர் சந்தைரோட்டில் திங்கள் தோறும் வாரச்சந்தை நடக்கிறது. நெருக்கடி மிகுந்த இப்பகுதியில் சந்தை நடப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. பள்ளி செல்லும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதைத் தவிர்க்கும் பொருட்டு, இப்பகுதியில் நகராட்சி சார்பில் 40 லட்சம் செலவில் உழவர்சந்தைக்கு இணையான "மாதிரி உழவர்சந்தை' அமைகிறது. மொத்தம் 140 கடைகள் அமைக்கப்படவுள்ளன.

காய்கறிகளை உலர்த்தி கொள்ள இடவசதி மற்றும் அடிப்படை வசதிகளுடன் கடைகள் அமைக்கப்படவுள்ளன.தேர்தலுக்குள் மாதிரி உழவர்சந்தை திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையர் லட்சுமி கூறும்போது, ""உழவர்சந்தைக்கு இணையாக காய்கறி சந்தைக்கான கடைகள் அமைக்கப்படவுள்ளன. கட்டுமானப்பணிகள் முடிந்ததும் வியாபாரிகளுக்கு கடைகள்

ஒதுக்கப்படும். வாரச்சந்தைக்கு பதிலாக தினமும் சந்தை நடக்கும் வகையில் மாதிரி உழவர்சந்தை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது," என்றார்.

**மண்புழு உரக்கூடம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,23:50 IST

காரியாபட்டி : காரியாபட்டி வரலொட்டியில் தேசிய வேளாண் திட்டம் சார்பாக மண்புழு உரம் தயாரிக்கும் கூடம் அமைக்கப்பட்டது. கலெக்டர் சண்முகம் ஆய்வு செய்தார் விவசாய இணை இயக்குனர் ராமராஜ், துணை இயக்குனர் கனகராஜன், உதவி இயக்குனர் பாண்டித்துரை, உடன் இருந்தனர்.

**நரிக்குடி பகுதியில் 1,400 எக்டேரில் "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,23:48 IST

நரிக்குடி : நரிக்குடி பகுதியில் குறைந்த செலவில் அதிக விளைச்சல் தரக்கூடிய "ராஜராஜன் 1000' நெல் பயிர் 1,400 எக்டேரில் பயிர் செய்யப்பட்டுள்ளது.இடு பொருள் செலவு அதிகரிப்பு காரணமாக நெல் பயிர் செய்யும் பரப்பு குறைந்து வருகிறது. உற்பத்தி செலவை குறைத்து, லாபத்தை அதிகரிக்க செய்யும், "ராஜராஜன் 1000' நெல் பயிர் செய்யும் முறையை வேளாண்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. கிருதுமால்மற்றும் கானல் ஓடை உப வடிநிலப்பகுதியில் நீர் வள, நில வள திட்டத்திலும், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், ஆத்மா ஆகிய திட்டங்களின் மூலம் செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் அரசு மானியமாக நீர் வள, நில வள திட்டத்தில் ரூ.7,600 , தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தில் ரூ. 3,000 ம், ஒரு எக்டேருக்கு இடு பொருள்கள் வழங்கப்படுகின்றன. ஆத்மா திட்டத்தில் ரூ.3,000,ம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில் ரூ.3,000 ம் மதிப்பிலான இடு பொருள்கள் ஒரு ஏக்கருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தினத் தந்தி

## சர்வதேச சந்தையில் பற்றாக்குறை காபி விலை மேலும் உயரும்



எஸ் சுஜாதா

கோயம்புத்தூர்

சில்லரை விற்பனையில் ஒரு கிலோ காபி விலை தற்போது ரூ.300–ஆக உள்ளது. சர்வதேச சந்தையில் அளிப்பு குறைந்துள்ள நிலையில், நடப்பு மாதத்தில், விலை மேலும் ரூ.50 அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

13 ஆண்டுகளில்...

காபி வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் இது குறித்து கூறும்போது, “கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு காபி விலை உயர்ந்துள்ளது. உலக அளவில் தேவைப்பாடு – அளிப்புக்கிடையே இடைவெளி அதிகரித்து வருகிறது. பிரேசில், இந்தியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் பருவநிலை மோசமாக உள்ளது. இதுவும் காபி விலையை அதிகரிக்கச் செய்துள்ளது” என்று தெரிவித்தார்.

பருவநிலை கோளாறு காரணமாக மத்திய அமெரிக்க நாடுகளிலும், கொலம்பியாவிலும் அராபிகா காபி உற்பத்தி சரிவடைந்துள்ளது. உலகின் மொத்த அராபிகா காபி உற்பத்தியில் இந்த நாடுகளின் பங்களிப்பு 65 சதவீதமாக உள்ளது. முக்கிய நாடுகளில் உற்பத்தி சரிந்துள்ளதால், உலக நாடுகளில் காபி விலை உயர்ந்து வருகிறது.
இந்தியா போன்ற நாடுகளில், சாதாரண மனிதர்களின் கைக்கு எட்டாத தூரத்திற்கு காபி சென்று கொண்டிருக்கிறது. எனவே மிகக் குறைந்த அளவில்தான் காபி வாங்குகின்றனர் என காபி டே ஃபிரெஷ் அண்டு கிரவுண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் காபி பயன்பாடு அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டில் காபி விலை சர்வதேச நிலவரத்தை ஒட்டியே நிர்ணயம் செய்யப்படுகிறது. ஏனென்றால் நாட்டில் உற்பத்தியாகும் காபியில் 75 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது.
காய்கறி விலை
ஹோட்டல் நிறுவனங்களை பொறுத்தவரை காபி விலை உயர்வு அதிக பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இந்த நிறுவனங்களுக்கு காய்கறி விலை உயர்ந்து வருவதுதான் கவலையளிப்பதாக உள்ளது. உதாரணமாக வெங்காயம் விலை உயர்வால் ஹோட்டல்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஹோட்டல்களில் காபிக்கான தேவைப்பாடு குறைவாக உள்ளது. ஆனால் வெங்காயத்திற்கான தேவை அதிகமாக உள்ளது. சில பெரிய ஹோட்டல்களில் நாள் ஒன்றுக்கு 100 கிலோ வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் சிறிதளவு விலை உயர்ந்தாலும் செலவினம் கடுமையாக அதிகரித்து விடுகிறது என முன்னணி ஹோட்டல் நிறுவனம் ஒன்றின் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

## இந்தியாவில் முந்திரி மகசூல் 7 லட்சம் டன்னை தாண்டும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

அடுத்த நிதி ஆண்டில் (2011–12) நம் நாட்டில் முந்திரி மகசூல் 7 லட்சம் டன்னை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் முந்திரி உற்பத்தி 6.29 லட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு பருவங்களில்...

நம் நாட்டில் இரண்டு பருவங்களில் முந்திரி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மேற்கு கடற்கரை பகுதியில் முந்திரி பூப்பதும், கனிவதும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறுகிறது. அறுவடை ஜனவரி மாத இறுதியில் மேற்கொள்ளப்படுகிறது. கிழக்கு கடற்கரை பகுதியில் முந்திரி பூப்பதும், கனிவதும் டிசம்பர் மாதத்தில் நடைபெறுகிறது. அறுவடைப் பணிகள் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறும்.

முந்திரி உற்பத்தி குறித்த மதிப்பீடுகள் திருப்திகரமாக இருந்தாலும், நடப்பு நிதி ஆண்டில் முந்திரி சாகுபடி பரப்பளவை பொறுத்தவரை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்ட வாய்ப்பில்லை என இத்துறையை சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன. நடப்பு ஆண்டில் சாகுபடி பரப்பளவை 25,000 ஹெக்டேர் அதிகரிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் சுமார் 14,000 ஹெக்டேர்தான் உயர்த்த முடியும் என முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குனரகத்தின் இயக்குனர் வெங்கடேஷ் ஹபாலி தெரிவித்தார்.

ரப்பர் தோட்டங்கள்

கர்நாடகா மற்றும் கேரளாவில் பல விவசாயிகள் தமது முந்திரி தோட்டங்களை ரப்பர் தோட்டங்களாக மாற்றியுள்ளனர். மேலும் பலர் சுரங்க தொழிலுக்கு சென்று விட்டனர். எதிர்பார்த்த அளவிற்கு முந்திரி சாகுபடி பரப்பளவை உயர்த்த முடியாததற்கு இதுவும் ஒரு காரணம் என அவர் மேலும் கூறினார்.

நடப்பு நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் முந்திரி விவசாயிகளுக்கான நிதி உதவியை ஹெக்டேருக்கு ரூ.20,000–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது, முந்தைய பட்ஜெட்டில் ரூ.11,250–ஆக இருந்தது. முந்திரி மறுசாகுபடி மற்றும் புது சாகுபடிக்காக இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது. நிதி உதவி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும், முந்திரி சாகுபடி பரப்பளவு எதிர்பார்த்த அளவிற்கு உயரவில்லை.

## *வெங்காயம், காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் விலை உயர்வால் உணவு பொருள் பணவீக்கம் 18.32 சதவீதமாக அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இல்லத்தரசிகள் சமையலில் அன்றாடம் அதிகம் பயன்படுத்தும் வெங்காயம், காய்கறிகள் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து வருகிறது. பால் மற்றும் இதர அத்தியாவசிய பொருள்கள் விலையும் அதிகரித்து வருகிறது. இவற்றை வெளிப்படுத்துகின்ற வகையில், டிசம்பர் 25-ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 18.32 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய வாரத்தில் 14.44 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இது 3.88 சதவீதம் அதிகமாகும்.*

*தொடர்ந்து ஐந்து வாரங்களாக உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் உயர்ந்து வருகிறது.*

வெங்காயம்

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயம் விலை 23.01 சதவீதம் உயர்ந்துள்ளது. சென்ற ஓர் ஆண்டு காலத்தில் 82.47 சதவீதம் அதிகரித்துள்ளது. பால் விலை ஓர் ஆண்டு காலத்தில் 19.59 சதவீதமும், பழங்கள் விலை 19.99 சதவீதமும் உயர்ந்துள்ளது.*

*காய்கறிகள் விலை மிகவும் உயர்ந்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்களின் விலையும் 20.83 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவு பொருள்கள் மட்டுமின்றி, டயர்கள், கார்கள் மற்றும் வாஷிங் மெஷின்கள் உள்ளிட்ட நுகர்வோர் சாதனங்கள் விலையும் உயர்ந்து*

வருகிறது.

இதனையடுத்து மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்க விகிதம் மிகவும் அதிகரிக்கும் என்ற அச்சப்பாடு நிலவுகிறது. சென்ற நவம்பர் மாதத்தில் இது 7.75 சதவீதமாக இருந்தது. டிசம்பர் மாதத்திற்கான பொது பணவீக்கம் குறித்த மதிப்பீட்டை மத்திய புள்ளியியல் துறை இம்மாதம் 14–ந் தேதி அன்று வெளியிட உள்ளது.

வேளாண் உற்பத்தி

பணவீக்கம் உயர்வதால், மக்கள் அவர்களது வருவாயில் பெரும் பகுதியை உணவு பொருள்களுக்காக செலவிட வேண்டிய நிலை உருவாகும். இதனால், இதர பொருள்கள் விற்பனை குறைந்து, தொழில் துறை உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு, பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியமாகும்.

இதனை கட்டுக்குள் கொண்டு வர, உணவு பொருள்கள் ஏற்றுமதியை குறைத்து, இறக்குமதியை அதிகரிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

பாரத ரிசர்வ் வங்கி

மக்களிடம் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்போது, தேவைப்பாட்டைக் காட்டிலும் மிதமிஞ்சிய அளவில் பொருள்களை வாங்க அது தூண்டும். எனவே, பணவீக்கததை குறைக்க பணப்புழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். இதனையடுத்து, பாரத ரிசர்வ் வங்கி, வரும் ஜனவரி 25–ந் தேதி அன்று வெளியிட உள்ள கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில் மட்டும், இந்த வட்டி விகிதங்கள் ஆறு முறை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வங்கிகளின் லாப வரம்பு பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சப்பாடு உருவாகி, வியாழக்கிழமை அன்று வங்கி பங்குகளின் விலை மிகவும் சரிவடைந்தது.

# வெங்காய விலை உயர்வுக்கு வியாபாரிகளின் ரகசிய கூட்டணி காரணமா? மத்திய அரசு விசாரணை

புதுடெல்லி, ஜன.7–

வெங்காய விலை உயர்வுக்கு வியாபாரிகளிடையே நிலவும் ரகசிய கூட்டணிதான் காரணமா? என மத்திய அரசு விசாரணை நடத்தி வருகிறது.

விலை உயர்வு

நாடு முழுவதும் வெங்காய விலை தாறுமாறாக உயர்ந்து வருகிறது. சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் நேற்று வெங்காய விலை கிலோ ரூ.55 முதல் ரூ.60 வரை இருந்தது.

வெங்காய விலையை குறைக்க மத்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்தது. வெளிநாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய வரியை ரத்து செய்தது. பாகிஸ்தானில் இருந்து டன் கணக்கில் வெங்காய இறக்குமதிக்கு நடவடிக்கை எடுத்தது.

வியாபாரிகள் கூட்டணி

இந்நிலையில், வியாபாரிகள் தங்களுக்குள் ரகசிய கூட்டணி அமைத்துக் கொண்டு, வெங்காய விலையை ஏற்றி வருவதாக, வியாபார போட்டியை கண்காணிக்கும் மத்திய அரசு அமைப்பான 'இந்திய வியாபார போட்டி ஆணையத்துக்கு' (சி.சி.ஐ.) தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, வியாபாரிகளின் ரகசிய கூட்டணி பற்றி அந்த ஆணையம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

ஆணையத்தின் டைரக்டர் ஜெனரல் (விசாரணை) இந்த விசாரணையை நடத்தி, 45 நாட்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. வியாபார போட்டி சட்டம் மீறப்படும்போது, அதுபற்றி விசாரணை நடத்த இந்த ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு.

காரணம் என்ன?

இதுகுறித்து, இந்திய வியாபார போட்டி ஆணைய வட்டாரங்கள் கூறியதாவது:–

வியாபாரிகள் ரகசிய கூட்டணி அமைத்து இருப்பார்களா? என்று ஆய்வு நடத்துவது பற்றி பலதடவை ஆலோசனை நடத்தினோம். மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது, இது விசாரணைக்கு உகந்தது என்று தோன்றியது.

எனவே, நாங்களாக முன்வந்து விசாரணை நடத்துகிறோம். வெங்காயத்தின் தேவை மற்றும் விநியோகம் குறித்தும், வெங்காய விலை குறித்த பத்திரிகை செய்திகளையும், வெங்காய மார்க்கெட்டுகளில் பெறப்பட்ட தகவல்களையும் ஆய்வு செய்து இந்த விசாரணை முடிவை எடுத்துள்ளோம்.

இவ்வாறு அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் தடை

இதற்கிடையே, நேற்று காலை வாகா எல்லை வழியாக இந்தியாவுக்கு வெங்காயம் ஏற்றி வந்த 300 லாரிகளை திடீரென பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநில அரசு தடுத்து நிறுத்தியது. இதுகுறித்து எவ்வித முன் எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. மேலும், பாகிஸ்தானில் இருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெங்காய ஏற்றுமதி காரணமாக பாகிஸ்தானில் வெங்காயத்தின் விலை அதிகரித்து விட்டதாகவும், எனவே, உள்நாட்டில் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதற்காக வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் இந்த திடீர் முடிவுக்கு இந்தியா அதிர்ச்சி தெரிவித்துள்ளது.